**NYMARKSKOLEN**

**முக்கிய நோக்கங்கள்**

- பொறுப்பு
- ஆற்றல்
- ஓற்றுமை
- பன்முகத்தன்மை
- மகிழ்ச்சி

ஆகையால் நாம் கீழே குறிப்பிடும் விடயங்களில் கவனம் செலுத்துகின்றோம்:

- கற்பிக்கும் முறையை வளர்க்கவும் வெவ்வேறு முறையில் கற்ப்பிக்கவும்
- மாணவர்களுக்கு கற்கும் விருப்பத்தை வளர்க்கவும்
- பாடங்களை மாணவர்களுக்கு அர்த்தமுள்ளதாகவும் அவர்களின் விருப்பு வெறுப்பக்களுக்கு ஏற்றவாறு கொண்டு செல்லவும்
- படிப்பு தவிர்த்து வேறு தினசரி வேலைகளையும் இசை சார்ந்தவிடயங்களையும் பாட நேரங்களில் இணைக்கவும்
- இங்கு செல்லும் அனைத்து மாணவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும்
- அனைவருக்கும் ஏற்றவாறு ஓரு சமுதாயம் மற்றும் கலாச்சாரம் அமைக்கபட வேண்டும்

ஆகையால் நாம் எதிர்பார்ப்பது:

- அனைவரும் சட்ட திட்டங்களை கடைபிடிக்க வேண்டும்
- அனைவரும் ஏனையவர்களின் வித்தியாசங்களை மதிக்க தெரிந்து இருக்க வேண்டும்
- மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு அனைவரும் ஒத்துழைக்கக வேண்டும். அது உங்கள் பொறுப்பு
- பாடசாலை கட்டிடங்களை மற்றும் பாடசாலையில் உள்ள பொருட்களை பாதுகாக்க பட வேண்டும்
- பாடசாலையில் கொடுக்கப்படும் தகவல்களின் முக்கியத்துவம் புரிந்து செயல்பட வேண்டும்
- பாடசாலையில் பணிபுரியும் அனைத்து பெரியவர்களும் மாணவர்களுக்கு எடுத்துகாட்டாக இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்
- பணி புரியும் அனைவரும் வளர்ச்சியை நோக்கி பயணிக்க வேண்டும்
- பாடசாலையில் பணிபுரியும் அனைவரும் தமது குழுக்களுக்குள் சரியான முறையில் செயற்பட வேண்டும்
- மாணவர்கள் தமது கல்வியில் ஆர்வம் காட்டி கற்க வேண்டும்
- பெற்றோர்கள் குழந்தைகளின் பாடசாலை சார்ந்த விடயங்களின் கவனம் செலுத்த வேண்டும்

(Fællessamlinger og turneringer) அனைவருக்கும் சேர்ந்து நடக்கும் விடயங்கள் ஒவ்வொரு நாளும் இடம்பெறும். இனி பாடசாலை ஆரம்பிக்கும் புதிய மாணவர்களுக்கும் விசேடமான ஒரு ஆரம்பம் அதாவது பல விளையாட்டுக்கள் செயற்ப்பாடுகள் இணைத்து (introforløb) செய்யவாம் என திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு நாம் செய்தால் பதிய பாணவர்கள் ஒற்றுமையாக செயல்பட்டு மற்றவர்களை புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

நோக்கம்:

மாணவர்களின் அடையாயங்களை வெளிப்படுத்தும் காலச்சாரங்களை பேணும் ஒரு அருமையான பாடசாலையை உருவாக்குவதே எமது நோக்கம். நாங்கள் எமது மற்றும் மற்றவர்களின் அனுபவங்களை கருத்தில் கொண்டு வளர்ச்சியை நோக்கி பயணிக்க விரும்புகின்றோம்.

அதாவது இங்கு செல்லும் மாணவர்கள் தங்களது படிப்பை எமது பாடசாலையில் முடித்துக் கொண்டு வெளியேறும் போது அவர்கள் கல்வியையும் மற்றவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய திறன்களையும் தனிப்பட்ட வளர்ச்சியையும் வளர்த்து கொண்டு செல்வார்கள். இவ்வாறான விடயங்கள் அவர் எதிர்காலத்தில் சந்திக்கும் விடயங்களுக்கு உதவும்.

LOMA STÅR FOR - LOKAL MAD – உணவு

LOMA - எமது நோக்கம்

- ஒரு ஆரோக்கியமான உணவுத் திட்டத்தை இணையோருக்கு கற்றுக் கொடுப்பது
- மாணவர்களின் ஆற்றல் திறன் ஒற்றுமை போன்ற விடயங்களை வளர்த்து கொள்ளவும்.
- இளையோருக்கு வெவ்வேறான உணவுமுறைகளை கற்றுத்தரவும்

LOMA கீழே குறிப்பிடும் இந்த விடயங்களில் கவனம் செலுத்துகின்றது :

1. உணவு ஆரோக்கியமாக இருக்க வேண்டும். பசுமையான உணவுப் பொருட்களில் செய்யப்பட வேண்டும்
2. ஆரோக்கியமான உணவை செய்வதற்க்கு அதற்கான ஒரு இடம் அமைத்தல்
3. எமது நகரத்தில் உள்ள கடைகளில் பசுமையான உணவுப் பொருட்களை பாவித்தல்
4. இந்த செயற்த்திட்டமானது வேலை சார்ந்த சட்டதிட்டங்கள் தண்ணீர் பாவனை மற்றும் CO2 கழிவு போன்ற விடயங்களுக்கு தடயாக செயற்ப்பட முடியாது

**LOMA தினசரி வாழ்ககை மற்றும் பாட நேரங்களிலும்**

Nymarkskolen இல் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கு குறைந்தது வருடத்துக்கு ஒரு முறையாவது LOMA கிழமையில் அவர்கள் கலந்து கொண்டு அவர்களின் நண்பர்களுடன் இணைந்து உணவு ஆரோக்கியம் பற்றி அறிதல். இந்த சமையல் பாடமானது பாணவர்கள் சமையல் வல்லுனர்களுடன்

இணைந்து பாடசாலை சமையல் அறையில் இணைந்து பாடசாலையில் உள்ள அனைவருக்கும் சமைக்க வேண்டும். பாடங்களை பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் கவனிப்பார்கள் . இந்த செயற்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவெனில் அனைவரும் இணைந்து ஒற்றுமையாக செயல்படுவதே இதன் நோக்கம் ஆகும். ஆகையால் அனைவரும் இணைந்தே சாப்பிடவேண்டும் அதாவது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள். வீட்டில் இருந்து உணவு கொண்டுவருபவர்கள் மற்றும் LOMA உணவு உண்பவர்கள்.

நாம் இங்கு செய்யும் உணவுகள் சுயதார அமைச்சரவை குறிப்பிடும் சட்டதிட்டங்களுக்கு ஏற்றவாறே இருக்கும். allergi போன்ற விடயங்களை கருத்தில் கொண்டே செயற்ப்படுவோம். உணவை முன்னரே பதிவு செய்ய வேண்டும். ஒரு கிழமைக்காள பதிவு 20 kr./skoledag. நான்கு கிழமைக்காள பதிவு 18 kr./skoledag. பதிவு செய்வது மற்றும் பணம் செலுத்துவதற்க்கும் [www.lomad.dk](http://www.lomad.dk) இங்கே செல்லவும். குறைந்த பட்சமானவர்கள் 25 kr பாடசாலையில் உடனே உணவு வாங்கலாம்